For up to date Fashionable Tailoring
VISIT
RAKUMATH TAILORS
No. 154, Manipay Road, Jaffna.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-25

பெருநாள் வாழ்த்துக்கள்
ஆடவருக்கான உடைகளை
தைப்பதற்கு
விஜயம் செய்யுங்கள்
றஹுமத்
ரெயிலேர்ஸ்
No 154, மானிப்பாய் ரோட்,
(மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 21 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 10 (06 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 216

# ஒப்பந்த நகல் சட்டம் அக்டோபரில் தான் வரும்?



செய்தியாளர் மாநாட்டில் சங்கர், ஜோனி, மாத்தயா, பிரபா, யோகி. (படம் சண். ஜோண்சன்)

முச்சந்தி முரளி



அப்ப இனிப் பரபரப்பான வதந்தியளுக்கு இடமிராது எண்டு சொல்லுங்கோ... ஆயுதங்கள் எல்லாம் ஒய் வெடுக்கப் போகுதுகள் எல்லே...!

## இம்மாதம் சமர்ப்பிப்பதற்கு தென்னிலங்கை நிலை சாதகமில்லை

கொழும்பு, ஆகஸ்ட் 6

**இலங்கை - இந்திய (ஜே. ஆர் - ராஜீவ்) ஒப்பந்தத்தை உள்ளடக்கிய நகல் சட்டம் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போல, இம்மாதம் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.**

**அனேகமாக எதிர்வரும் அக்டோபர் மாதத்திலேயே நகல் சட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அறிய வருகிறது.**

தென்னிலங்கையில் இப்போதுள்ள சூழ்நிலை, ஒப்பந்த நகல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க சாதகமாக இல்லை என்று அரசாங்க உயர் வட்டாரங்கள் கருதுவதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜே. ஆர்.—ராஜீவ் ஒப்பந்தத்தின் சட்ட நகல் இம்மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தென்னிலங்கையில் நடந்த வன் செயல்களால் அங்கு மக்களிடையே ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் நிலை இன்னும் பெருமளவில் ஏற்படவில்லை.

அரசாங்க எம். பிக்களின் வீடுகள் கூடத் தாக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தூண்டப்பட்டவர்களாக உள்ளார்கள்.

ஆகையால் இம்மாதம் சூட்டோடு சூடாக ஒப்பந்த நகல் சட்டத்தை சமர்ப்பிப்பது புத்திசாலித்தனம் அல்ல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையிலிருந்து புறப்பட்ட கனரக வாகனங்கள்

மிக நீண்ட காலத்தின் பின்னர் நேற்று பிற்பகல் சுமார் 2 மணியளவில் யாழ் கோட்டையில் இருந்து முதன்முதலாக கனரக வாகனங்கள் யாழ் நகரை நோக்கி வீதிகளில் தரை மார்க்கமாக வந்தன.

கோட்டை முகாமில் இருந்து கடற்கரை வீதி வழியாக வெளிவந்த ஐந்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை— பலாலி வீதி ஆகியவற்றினூடாகச் சென்றன.

(உ-51)

## சிங்கள இனவாதம் தோன்றினால் மீண்டும் துப்பாக்கி ஏந்த நேரிடும்
## செய்தியாளர் மாநாட்டில் பிரபா

யாழ்ப்பாணம், ஆக 6

சிங்கள மக்கள் தமிழர்களுக்கு எதிராக மீண்டும் இனக்கலவரத்தில் இறங்கினால் நான் அவர்களுக்கு எதிராக மீண்டும் துப்பாக்கி ஏந்த நேரிடும்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. பிரபாகரன் இவ்வாறு கூறினார்.

அவர் செய்தியாளர்களுக்குப் பதிலளிக்கையில் மேலும் சொன்னதாவது:-

நான் தொடர்ந்தும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஒரு சரித்திரம் மாறியது



போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் ஜே.ஆரின் கடிதத்தை ஜெனரல் சேபால ஆட்டிகல திரு. யோகியிடம் வழங்குகிறார். மத்தியில் மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங் காணப்படுகிறார். (படம்:சண். ஜோண்சன்)

# புலிகளின் ஆயுதங்கள் பலாலியில் கையளிப்பு!

## இந்திய — இலங்கை இராணுவ அதிகாரிகள் பொறுப்பேற்பு
## போராளிகளுக்கு பொது மன்னிப்பு

— அலுவலகச் செய்தியாளர்:- சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

**தமிழர் சரித்திரத்தில், இலங்கையின் சரித்திரத்தில் நேற்று மற்றொரு அத்தியாயம் மாறியது. தமிழ்ப் போராளிகள் தாம் வைத்திருந்த ஆயுதங்களுக்கு நேற்றுப் பிரியாவிடை கொடுத்தார்கள்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைக்கும் பணி சம்பிரதாய பூர்வமாக நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இடம் பெற்றது.**

**இந்திய, இலங்கை இராணுவ அதிகாரிகள் ஆயுதங்களைப் பொறுப்பேற்றனர்.**

ஆயுதங்களைப் பொறுப்பேற்கும் அதிகாரிகளாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, இந்திய அமைதிப் படையின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கீர்த் சிங் ஆகியோரை நியமித்திருப்பதாகக் கூறும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அறிவிப்பு முதலில் வாசிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஜெனரல் சேபால ஆட்டிகல பேசினார்.

அவர் சொன்னதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்களே!

வருங்கால இலங்கைக்கு இன்று ஒரு சரித்திர முக்கியத்துவமான நாளாகும்.

சகல ஆயுதங்களையும் கையளிக்கும் இந்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா சிப்பாய்களுக்கு நடந்த "கதி"

யாழ்ப்பாணம், ஆக 6

நேற்று புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் நேரத்தில் அந்த இடத்துக்கு வந்த இரு ஸ்ரீலங்கா சிப்பாய்களை இந்திய இராணுவத்தினர் சோதனையிட்ட பின்பே அங்கு செல்ல அனுமதித்தனர்.

ஒரு 'டிரக்' நிறைய வைபவம் நடந்த இடத்துக்கு வந்த சிப்பாய்கள் உள்ளே செல்ல அனுமதி கேட்டனர். அவர்களுக்கு அங்கு செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

அதைத் தொடர்ந்து இருவருக்கு மாத்திரம் உள்ளே செல்ல அனுமதி தரப்பட்டது.

அவர்கள் இருவரும் பலத்த சோதனையின் பின்னர் நிராயுதபாணிகளாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஒ-7)

## கண்ணிவெடி கவனம்
## அரச அதிபர் எச்சரிக்கை

அண்மைக்கால அசம்பாவிதங்களையடுத்து தங்கள் வீடு வாசல்களிலிருந்து வெளியேறி தற்போது மீண்டும் அங்கு குடியமரச் செல்வோர், அல்லது தமது ஆதனங்களைப் பார்வையிடச் செல்வோர் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளும்படி அரச அதிபர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இப்பகுதிகளில் வைக்கப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடி குண்டுகள் தவறுதலாக மீட்கப்படாமல் இருக்கக் கூடும் என்பதாலேயே இந்த எச்சரிக்கை.

அண்மையில் தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்றவர்களில்சிலர் இவ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிக்கொடி மீது மோகம்

யாழ்ப்பாணம், ஆக 6

நேற்றுபலாலி இராணுவ முகாமுக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற 'டிரக்கில்' இருந்த புலிகளின் கொடியை, இலங்கை விமானப்படை வீரர் ஒருவர் கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

தான் மட்டக்களப்பை சேர்ந்தவர் என்றும் புலிகளின் ஞாபகார்த்தமாக அந்தக்கொடி தன்னிடம் இருக்கவேண்டும் என்றும் அவர் புலிகளிடம் தமிழில் தெரிவித்தார். (ஒ-7)

## சுபநேரம்

6-8-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
07.34 முதல் 09.04 வரை
ராகுகாலம்:-
1.34 முதல் 3.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஹஜ்ஜுப் பெருநாள்
வைஷ்ணவ ஏகாதசி

## இன்று ஹஜ்ஜுப் பெருநாள்

யாழ்ப்பாணம், ஆக. 26

இன்று உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் ஹஜ்ஜுப் பெருநாளை வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

(வ)

★ புலிகள் நேற்று ஒப்படைத்த ஆயுதங்கள் டிரக்கில் இருந்து இறக்கப்பட்ட வேளையில் எடுக்கப்பட்ட படம் ★



## மண்டைதீவுமினிமுகாம் நேற்றுடன் காலி!

குருநகர், ஆக 6

மண்டைதீவு 'மினி' இராணுவ முகாம் நேற்றுடன் காலியானது.

அங்கிருந்து பொருள்களை எடுத்துச் செல்வதில் நேற்றுக் காலையில் இரு ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டிருந்தன.

அடிக்கடி மண்டைதீவுக்குச் சென்று தரையிறங்கிய இலங்கைவிமானப்படை ஹெலிகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

கோட்டையைச் சுற்றியுள்ள

## கண்ணிகளை அகற்றும் வேலை இன்று ஆரம்பம்

யாழ் கோட்டை முகாமைச் சுற்றியுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் வேலைகளில் இந்திய இராணுவ வீரர்கள் இன்று வியாழக்கிழமை ஈடுபடுவர்.

அதி சக்திவாய்ந்த புல்டோசர்கள் மூலம் இந்தக் கண்ணி வெடிகளை அவர்கள் வெடிக்க வைப்பார்கள்.

இதேவேளை நேற்றும் பல கண்ணி வெடிகளை போராளிகள் வெடிக்க வைத்தனர். (ஒ-10)

## முண்டியடித்த பத்திரிகையாளர்

யாழ்ப்பாணம், ஆக 6

நேற்று பலாலியில் நடைபெற்ற ஆயுதங்கள் கையளிக்கும் வைபவத்தில் வெளிநாட்டு செய்தியாளர்கள் படம் எடுக்கவும் செய்தி பெறவும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையில் வளரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**விற்பனைக்கு**

வாழ்நாள் முழுவதும் வழிகாட்டியாக இருக்கும் உன்னதமான எண் ஜோதிட நூல் 'வாழ்க்கைக்கு' நலம்தரும் 'நியுமராலஜி' தனிப்பிரதி 6-50 ''தேனிசை மழை'' ஐந்தாம் பாகம் புதிய பாடல்கள் நிறைந்தது தனிப்பிரதி நான் குரூபா. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் கிருஷ்ணராஜா ஸ்டோர்ஸ், இணுவில் ராஜா விடியோ அளவெட்டி, ஜோதி புத்தகசாலை, பன்னூர். ஆர். வி. புத்தகசாலை, கோப்பாய். (1395)

**தேவை**

Kitchen Helper Steward காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நேரில் தகமைகளுக்கான பத்திரங்களுடன் வரவும் யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ட் 168, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (1397)

எந்தத்துறையைப் பற்றியும் விவாதிக்கக்கூடிய நண்பர், நண்பிகள் தேவை. விண்ணப்பிக்கவும், உங்களைப் பற்றிய முழு விவரங்களுடன். முகவரி:- க. உதயசங்கர், கந்தசுவாமிகோயில் றேட், வவுனியா. (1399)

**வகுப்புகள்**

Science Centre, Nelliyady, Point Pedro, Vaniyam Institute, Puloly 6, 7, 8, 9, O/L, A/L வகுப்புகள் 10-8-87 இல் ஆரம்பமாகின்றது பழைய ஆசிரியர்கள் நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகிகள் (1396)

இணைப்பை முஸ்லிம்கள் முன்னரே ஆதரித்திருந்தால்

# 85இலேயே இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும்

## முஸ்லிம் பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 6

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் முன்னமேயே ஆதரவு தெரிவித்திருந்தால் 1985இலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கும். பிரச்சினையைப் பெரிதுபடுத்தி இழுத்தடிக்கும் வாய்ப்பும் வசதியும் அரசுக்குக் கிட்டியிருக்காது.

இப்படி பொத்துவில் தொகுதி விவசாயிகள் சம்மேளனத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ஈஸ்டர்ன் இப்ராஹிம் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழர்கள் வடக்கு—கிழக்கு இணைப்பைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இப்போது இணங்கிய இலங்கை அரசு ஏற்கனவே சம்மதித்திருந்தால் தமிழ் பேசும் மக்களின் பிரதேசம் சாம்பல் மேடாகி இருக்காது.

முஸ்லிம் மக்கள் தமிழர் தரப்புடன் பேசி தமது உரிமைகளை விகிதாசார அடிப்படையில் பங்கீடு செய்து தமிழ்ப் பிரதேச அமைப்புக்குள் அவற்றைச் சட்டரீதியாக ஆக்கிக்கொண்டால் மாத்திரமே தமிழ் பேசும் இரண்டு சிறுபான்மை இனங்களும் நிம்மதியாக வாழ வழியேற்படும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

### வாபஸ்

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவம் முற்றாக வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் இந்திய இராணுவம் பல்வேறு இடங்களிலும் நிலை கொண்டுள்ள அதேவேளை ரோந்தும் சுற்றி வருகின்றது. (உ-68)

கூட்டுறவுச் சங்கங்களின்

# நூறு நிலையங்கள் முற்றாகச் சேதம்

கொழும்பு, ஆக. 6

கடந்தவாரம் இடம்பெற்ற வன்செயல்களினால் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 100 கூட்டுறவுச்சங்க நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

இதனால் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்களுக்கு விற்பனை செய்ய விசேட நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதனை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சமிலஸ் பெர்னாண்டோ தெரிவித்தார். (உ-எ)

# 2 தினங்களில் 115 துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு ஆக. 6

தென் இலங்கையில் இரண்டு தினங்களில் மட்டும் 115 துப்பாக்கிகள் பொதுமக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி முனையில் இவை கொள்ளை இடப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள நவகமுவ என்னும் இடத்தில் உள்ளவர்களிடமிருந்து 17 துப்பாக்கிகள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டன.

சிலாபம், எம்பிலிபிட்டியா, மெதிரிகிரியா, வென்னப்புவ, வலஸ்முல பகுதிகளில் இருந்தும் துப்பாக்கிகள் கொள்ளை இடப்பட்டன.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## கி. ஜேர்மனி பயணமானார்

மானிப்பாய், ஆக. 6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் கிழக்கு ஜேர்மனி பயணமானார்.

இம்மாதம் 10 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரை கிழக்கு ஜேர்மனியிலுள்ள பெர்லின் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச மொழியியல் மாநாட்டில் இவர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பார். (இ-90)

## மல்லாகத்தில் உத்தரவுப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஆக. 6

பளை, வீமன்காமம் கிராமசேவை அலுவலர் பிரிவில் இருந்து குடிபெயர்ந்தவர்களுக்கான ஜூன் மாத நிவாரண உத்தரவுப் பத்திரமும் இதுவரை வேறு இடங்களில் பெறுகவர்களுக்கான இந்திய நிவாரண உத்தரவுப் பத்திரமும் மல்லாகத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரை அவற்றைப் பெறுதவர்கள் உடனடியாக பளை வீமன்காமம் பிரசைகள் குழுவுடனோ அல்லது கிராமசேவை அலுவலருடனோ தொடர்பு கொள்ளும்படி பிரசைகள் குழு கேட்டுள்ளது (இ-எ)

# தூதரகம் தாக்கப்பட்டிருந்தால் இந்தியக் கடற்படை நடவடிக்கை எடுத்திருக்கும்

கொழும்பு, ஆக. 6

இந்தியத் தூதரகம், அதன் அதிகாரிகள் தாக்கப்பட்டிருந்தால் கொழும்புத் துறைமுகத்தில் உள்ள இந்தியக் கடற்படைக் கப்பல்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இருந்து இருக்கும்.

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இந்தியத் தூதர் முன்கண்ட பதிலை அளித்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் பூரணமாக வரவேற்றிருக்கின்றார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல் அமைச்சரும் கொழும்பு வரவிருந்தார். உடலநிலை காரணமாகவே அவரால் விஜயம் செய்ய முடியாமல் போயிற்று.

இப்படி இந்தியத் தூதர் டிக்ஷிற் மேலும் தெரிவித்தார். (இ-எ)

சேதமாக்கப்பட்ட

## தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களைத் திருத்த 10 மாதங்கள் செல்லும்

கொழும்பு, ஆக. 6

நுகேகொட, மஹரகம பகுதிகளில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதங்களைத் திருத்தி மீண்டும் சேவைகளை வழங்க பத்து மாதங்கள் எடுக்கும்.

இப்படி தொலைத்தொடர்புத் திணைக்கள உயர் அதிகாரி அறிவித்திருக்கின்றார்.

சுமார் பத்தாயிரம் தொலைபேசிப் பாவனையாளர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்கு பதினைந்து கோடி ரூபா வரையில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்செயல்களின் போது சேதம் ஏற்பட்டது என்றும் அந்த அதிகாரி அறிவித்தார்.

கல்கிசை, அம்பலாந்தோட்டை, அம்பாந்தோட்டை, மாத்தளை, மாத்தறை, கொழும்பு, பாணந்துறை ஆகிய இடங்களில் உள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்களும் வன்செயல்களின் போது சேதமாக்கப்பட்டன (இ-எ)

## சாரணர் அணித்தலைவர் பயிற்சி நெறி

வட்டுக்கோட்டை, ஆக. 6

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் சாரணர்களுக்கான அணித்தலைவர் பயிற்சி நெறி வகுப்பை சித்தன்கேணி கணேசவித்தியாலயத்தில் இன்றும் நாளையும் (வியாழன் வெள்ளி) நடத்தும்.

இப்பயிற்சி நெறி காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் தலைமையில் காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். [இ-161]

## சைவ சமய பாடப் பரீட்சை

வட்டுக்கோட்டை, ஆக. 6

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசார மன்ற பரமானந்த சிவம் ஞாபகார்த்த நூல் நிலைய, எட்டாவது ஆண்டு நிறைவுவிழாவை முன்விட்டு சைவ சமய பாடப்பரீட்சை 8, 9 திகதிகளில் நடைபெறவுள்ளது (இ-161]

யாழ் பெரியாஸ்பத்திரி

# சகல வார்ட்டுக்களும் திறக்கப்பட்டுவருகின்றன

யாழ்ப்பாணம், ஆக 6

யாழ்—ஆஸ்பத்திரியில் மூடப்பட்டிருந்த சகல வார்ட்டுகளும் தற்பொழுது திறக்கப்பட்டு வருகின்றன.

இராணுவத் தாக்குதல்களினால் சேதமடைந்த வார்ட்டுகளை திருத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய இராணுவத்தினரின் வருகையை அடுத்தே இந்த புதிய நிலை உருவாகி வருகிறது.

தினமும் ஐநூறுக்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைக்கென வந்து செல்கின்றனர்.

இதேவேளை வார்ட்டுகளில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வெளியார் நுழைவது கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (இ-10)

## கிளிநொச்சியிலிருந்து வடமராட்சி திரும்புகிறார்கள்

கிளிநொச்சி, ஆக. 6

கடந்த ஜூன் மாதம் முதல் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிளிநொச்சி வந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

வடமராட்சி அசம்பாவிதம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானோர் கிளிநொச்சி, பூநகரி, விசுவமடு, திருவையாறு, வட்டக்கச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தங்கி இருந்தனர். (இ 76)

## சேதமடைந்த கட்டடங்களை இந்திய அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 6

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக யாழ் நகரில் சேதமடைந்த கடைகளையும், பாடசாலைகளையும், வீடுகளையும் இந்திய இராணுவ உயரதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டனர்.

இவர்கள் நூலகப் பகுதி, மாநகர சபைப் பகுதி ஆகியவற்றையும் நடந்துசென்று பார்வையிட்டனர்.

பொதுமக்கள் பலர் தமது பகுதிகளில் சேதமடைந்த இடங்களை இந்திய இராணுவத்தினரை அழைத்துச் சென்று காட்டினர்.

இதேவேளை இந்திய இராணுவத்தினர் நேற்று டிரக் வண்டிகளிலும் ஜீப்புகளிலும் யாழ்நகர வீதிகளில் ரோந்து வந்தனர். (இ-10)

### அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம், ஆக. 6

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளுக்கு ஏற்பட்ட கஷ்டநிலை குறித்து திருப்பனந்தாள் ஆதீன (காசிமடம்) கர்த்தா ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (இ-161)

### தென்னிலங்கையில் பணிபுரிவர்

கொழும்பு, ஆக 6

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து திருப்பி அழைக்கப்பட்ட பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் தென் இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலீஸ் மா அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார். (உ-எ)

# ஆனமடுவவில் ஆயுதங்கள் கொள்ளை!

கொழும்பு, ஆக. 6

கடந்தவாரம் பொலன்னறுவை ஆனமடுவ பகுதிகளில் ஆயுதம் தரித்த கோஷ்டியினர் வீடுவீடாகச் சென்று துப்பாக்கி [illegible] யும் அபகரித்துச் சென் [illegible]

இத்தகவலை பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை எவ்வளவு [illegible] என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## உங்கள் தேவைகளை உடன் பூர்த்திசெய்ய வேண்டுமா?

**திருத்தவேலைகள்**
- மின்சார உபகரணங்கள்
- தொலைக்காட்சி ([?] V.)
- Antenna

**பூச்சுவேலைகள்**
- வீடுகள்
- குளிர்சாதனப் பெட்டி
- கார்கள்
- மோட்டார் சைக்கிள்

வீட்டில் நீர்வழங்கற் குழாய் வேலைகள் (PLUMBING) வீட்டில் மின்சார (WIRING) வேலைகள் என்பன செய்து கொடுக்கப்படும்.

✶ மேற்குறிப்பிட்ட வேலைகள் யாவும் தரமான தொழில் நுட்பவியலாளரால் மேற்பார்வை செய்யப்படும்.

✶ மேலும் தோட்டம் விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் தபாற்கந்தோர் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 1500 சதுர அடி அடங்கிய சகல வசதிகளையும் கொண்ட வீடும், மேட்டுப் பயிர்செய்யக்கூடிய மூன்றரை ஏக்கர் காணியும் நல்ல தண்ணீர் வற்றாத கிணற்றுடனும் உடனடியாக 1000 கோழிகள் 15 மாடுகள் வளர்க்கக்கூடிய கட்டிடத்துடனும் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**MACK AUCTIONEERS and BROKERS**

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Telephone:- 24791, 24836

## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

i. எம்மிடம் கீழ்வரும் வேலைவாய்ப்புகள் உண்டு,
1. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Labourers / Cleaners வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்

சம்பளம் 350-S.R

2. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு

Maintenance Cleaners (பராமரிப்பு வேலையாளர்கள்)

சம்பளம் ரூ. 500--[?].R

சாப்பாட்டு, இருப்பிட வசதியுடன் ஒருமாத காலத்துள் பயணம் மேற்கொள்ளலாம்.

ii. ஏற்கனவே விசா வந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் அத்துடன் ஈராக் நாட்டிற்கு பாஸ்போட் தந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

iii. ★ புறூனை (BRUNEI) ★

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Cleaners (கிளீனேர்ஸ்) வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உண்டு.

சம்பளம் 250 U. S டொலர்
(சாப்பாடு இருப்பிடவசதிகளுடன்)
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

● மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

★ T. இந்திரநாதன் ★
(EVER - REST)
96, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஆண்டவன் உங்கள் பின்னே என்றும் நிற்கின்றார். நீங்கள் உலகுக்கு முதுகைக் காட்டித் திரும்பினால் அவரை நேருக்கு நேர் காண்பீர்கள்.

—பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
06.8.1987 த.பெ.இல: - 23

## இந்தியாவின் பொறுப்பு

தமிழ்ப் போராளிகள் தமது ஆயுதங்களை இந்தியப் படைகளிடம் ஒப்படைக்க இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட ஓர் இலட்சியத்தை அடைவதற்காகவே தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஏந்தினார்கள். அந்த இலட்சியத்தை அடையாமலே ஆயுதங்களைக் கீழே வைக்கப் போகிறார்கள். ஏன்?

எந்த விதமான சூழ்நிலையில், எவ்வகையான பின்னணியில் ஆயுதங்களை ஒப்படைக்க இணங்க வேண்டியிருந்தது?

மிகப் பெரிய விடுதலைப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன், ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான பின்னணி, சூழ்நிலை, காரண காரியங்கள் என்பவற்றை விவரமாக, விளக்கமாக அறிவித்திருக்கிறார்.

ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தம் பிரதானமாக இலங்கை — இந்திய உறவு பற்றியது. தமிழர் பிரச்சினையை அது வெறுமனே தொட்டு நிற்கிறது. அந்த ஒப்பந்தத்தின் மூலம் எமது தலைவிதியை எமக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கிறது. அதனால்தான் இலட்சியத்தை அடைவதற்கு முன்னரே ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிடம் இருந்து வந்த நெருக்குதல்களின், நிர்ப்பந்தங்களின் பேரில் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய வீரருடன் மோதும் சூழ்நிலை ஏற்படும். அதை நாம் விரும்பவில்லை. அதனால் ஆயுதங்களை இந்தியாவிடமே கையளித்து, எதிரியிடம் இருந்து மக்களையும், எம்மையும் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் இந்திய வீரரிடமே ஒப்படைக்கிறோம்.

இவ்வாறுகத் திரு. பிரபாகரன் நிலைமையை விளக்கி இருக்கிறார். எத்தகைய பின்னணியில் ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை மக்கள் இப்போது புரிந்து கொள்வார்கள்.

தங்கள் சகல சக்திகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலையில் போராளிகள் இந்த முடிவைச் செய்திருப்பது சமயோசிதமானதும், மதிநுட்பமானதும் ஆகும்.

இப்படி ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்படுவதற்குப் புலம் அமைத்தவர்கள் யார் என்பது விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. எமக்கு இந்நிலை ஏற்பட்டது தலைவிதியா? அல்லது சில சக்திகளின் சதியா அல்லது நாமே விட்ட தவறுகளா என்பது நிச்சயம் ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டும். அது எதிர்காலத்திலாவது சரியான பாதையில் சென்று எமது முழு உரிமைகளையும் நிறைவுறப் பெறுவதற்கு வழி வகுக்கும்.

ஈழத்தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பொறுப்பை இந்தியா சரிவரச் செய்யவேண்டும் என்றே ஒவ்வொரு தமிழனும் எதிர்பார்க்கிறான்.

இதில் ஒரு சிறு சந்தேகம் எழும் நிலை தோன்றுகிறது. இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்தியத் துருப்புக்களின் பிரதம பொறுப்பாளராக, உத்தரவிடும் தலைமை அதிகாரியாக இலங்கை ஜனாதிபதியே விளங்குவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அது சரியானால், தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு நீண்ட காலத்துக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுகிறது. அதே ஜனாதிபதியின் கீழ் பணிபுரிந்த ஸ்ரீலங்கா இராணுவம்தான் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியது. ஆகவே இந்திய இராணுவமும் இலங்கை ஜனாதிபதியின் உத்தரவுக்கு உட்பட்டு தமிழரை இம்சைப்படுத்தாதா என்ற கேள்வி தொக்கு நிற்கின்றதல்லவா?

இந்திய இராணுவம் அந்தச் சிக்கலில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தமிழர்களைப் பாதுகாக்கும் என எதிர்பார்ப்போம். தமிழர்கள் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ்க்கை நடத்த உதவும் என நிச்சயமாக நம்புவோம்.

தமிழர்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொண்டு இந்தியா இருந்துவிடலாகாது. அவர்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கவும் பொறுப்பு ஏற்கவேண்டும்.

ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டு விட்டதால், அதில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்பத்தான் தமிழர் உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதில்லை. ஒப்பந்த அமுல், அதிகார விவரங்கள் இன்னும் ஆறு வாரங்களில் ஆராய்ந்து இறுதியாக்கப்பட உள்ளன. ஆகையால் தமிழர்கள் தங்கள் தாயகத்தில் பூரண தன்னாட்சி நடத்துவதற்காவது இந்தியா உதவ நடவடிக்கை எடுக்க இன்னமும் சந்தர்ப்பமும் வாய்ப்பும் உண்டு. அவற்றைத் தக்கபடி பயன்படுத்துவது இந்தியாவின் முக்கிய பொறுப்பு.

தமிழர்களைப் பாதுகாப்பதுபோல அவர்களின் நியாயமான அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதும் இந்தியாவினது தலையாய பொறுப்பாகும்.

# பாக். அணுநிலையங்களை அமெரிக்கா பார்வையிட அனுமதிமறுப்பு

இஸ்லாமபாத், ஆக.5

அணு நிலையங்களை அமெரிக்க அதிகாரிகள் பார்வையிட அனுமதிக்க முடியாது என்று பாகிஸ்தான் கூறிவிட்டது.

அமெரிக்க அரசின் உதவி ராஜாங்க அமைச்சர் மைக்கல் ஆமகோஸ்டின் இஸ்லாமபாத் விஜயத்தின் முடிவில் பாகிஸ்தான் இப்படி அறிவித்தது.

பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

அணுகுண்டு தயாரிப்புக்குத் தேவையான முக்கிய உலோகம் ஒன்றை அமெரிக்காவில் இருந்து பாகிஸ்தானிய பிரசைகள் சிலர் கடத்த எடுத்த முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ, பொருளாதார உதவிகளைத் தற்காலிகமாகத் தடை செய்து உள்ளது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து அமெரிக்க உதவி அமைச்சர் மைக்கல் ஆமகோஸ்ற் இஸ்லாமபாத்துக்கு விஜயம் செய்து பாகிஸ்தான் அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

அணு நிலையங்களை பார்வையிட அமெரிக்க அதிகாரிகள் அனுமதிக்கப் படவேண்டும்; இல்லையேல் அமெரிக்க உதவிகள் கிடைக்கா - இப்படி திரு. ஆமகோஸ்ற் பாகிஸ்தானிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அமெரிக்க செனட், காங்கிரஸ் ஆகியவற்றின் தீர்மானங்களும் இது போன்றே அமைந்திருப்பதாகவும் திரு. ஆமகோஸ்ற் எடுத்துரைத்தார்.

இவரின் விஜயத்தின் முடிவில் அணு நிலையங்களை பார்வையிட அமெரிக்க அதிகாரிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பாகிஸ்தான் அறிவித்தது.

இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அணு ஆயுத பரிகரண உடன்பாட்டில் கையெழுத்திடின் அமெரிக்க அதிகாரிகளை அணு நிலையங்களைப் பார்வையிட அனுமதிப்போம் என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

அமெரிக்க - பாகிஸ்தான் உறவு சிறிது பதற்ற நிலையில் இருப்பதாக விஜயத்தின் முடிவில் அமெரிக்க உதவி அமைச்சர் ஒப்புக் கொண்டார். (இ-எ)

## இந்தியமீனவர்மீது தாக்குதல் இராது

புதுடில்லி, ஆக. 5

பாக்கு நீரிணைக் கடலில் மீன்பிடிக்கும் இந்திய மீனவரை இலங்கைக் கடற்படையினர் இனித் தாக்கமாட்டார்கள்.

இந்தியக் கடற்படைக் கப்பல்கள் பாக்குநீரிணையில் ரோந்துபுரிகின்றன.

இப்படி துணை அமைச்சர் நட்வர்சிங் புதுடில்லி ராஜ்ய சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

தி. மு. க. எம். பி. கோபாலசுவாமி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (-எ)

## டில்லி--சென்னை அதிவேக ரயில்

புதுடில்லி, ஆக. 5

புதுடில்லிக்கும் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூர் ஆகிய இடங்களுக்கும் இடையே எதிர்வரும் அக்டோபரில் இருந்து அதிவேக ரயில் சேவை நடத்தப்படவுள்ளது.

தினசரி இச்சேவை நடைபெறும் என்று ரயில்வே அமைச்சர் மாதவராவ் சிந்தியா அறிவித்திருக்கின்றார். (இ-எ)

## பலஸ்தீனர்களுக்கு சொந்தத் தாயகம்

### ராஜீவ் தொடர்ந்துவலியுறுத்து

புதுடில்லி, ஆக. 5

பலஸ்தீனர்களுக்கு தாயகம் கிடைக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் இந்தியா நிலையாக உள்ளது.

பிரதமர் ராஜீவ்காந்தி முன்கண்டவாறு சொன்னார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத்துக்கு கடந்த திங்கள் இரவு பிரதமர் காந்தி விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவித்தார்.

அப்போதே திரு. ராஜீவ் காந்தி முன்கண்ட உறுதிப்பாட்டை வெளியிட்டார்.

பலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியா என்றும் துணை நிற்கும்.

இது சம்பந்தமாக உலக அரங்குகளில் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியா குரல் கொடுத்து வருகின்றது.

இப்படி திரு. காந்தி மேலும் சொன்னார். (இ-எ)

**வெளி உலகில்**

## புதிய ஏவுகணை

பக்தாத், ஆக 5

நீண்ட தூரம் பாயும் ஏவுகணை ஒன்றை ஈராக் வளைகுடா கேந்திர நிலையத்தில் பொருத்தியுள்ளது.

புதிய ஏவுகணை சுமார் 380 மைல் தூரம் பாய்ந்து தாக்கும் வலிமையுள்ளது. ஈரானின் தலைநகரமான தெஹ்ரான் மற்றும் முக்கிய நகரங்கள் முதல் தடவையாக இந்த ஏவுகணையின் வலயத்துக்குள் வருகின்றன என்று ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கில் புதிய ஏவுகணை அறிவிப்பைத் தொடர்ந்து, வளைகுடாவில் பதற்ற நிலை மேலும் அதிகரித்துள்ளது (இ-எ

# ஒப்பந்தத்தை ஏற்றே ஆகவேண்டும் எது சொன்னாலும் கேட்கப் போவதில்லை

## இப்படி எம் மீது அழுத்தம் செய்யப்பட்டது

### டில்லிச் சந்திப்புக் குறித்து யோகி

நேற்று முன்தினம் சுதுமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் உரையாற்றிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் தமிழீழப் போராட்டத்தின் வரலாறு குறித்து யோகி உரையாற்றினார். அதையே இங்கு பிரசுரிக்கின்றோம்.

1972ஆம் ஆண்டிலிருந்து வளர்க்கப்பட்ட எமது இயக்கம் மிகப் பெரிய அளவு வளர்ச்சி கண்டது.

இந்த வளர்ச்சியின் காரணமாகவும் எமது வீரர்களின் திரம்மிக்க போராட்டத்தாலும் தியாகத்தாலும் பல சிங்களப் பொலீஸ் நிலையங்களும் இராணுவ முகாம்களும் தாக்கப்பட்டன.

சிங்கள இராணுவம் நிலைகுலைந்தது. தம்மைப் பலப்படுத்திக்கொள்ள, தம்மை நிலைப்படுத்திக் கொள்ள கால அவகாசம் தேவைப்பட்ட காரணத்தினாலே பேச்சுவார்த்தைக்கு எம்மை அழைத்தது.

''இது பேச்சுவார்த்தைக்கு உகந்த நேரம் அல்ல எனவே தயவு செய்து எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்காதீர்கள்'' என்று இந்திய அரசாங்கத்திடம் அப்போது சொன்னோம்.

அவர்கள் கேட்கவில்லை. எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்கள்.

**நிபந்தனை இன்றி**

திம்புவிலே எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி, எந்தவிதமான நிபந்தனையுமின்றிப் பேச்சுவார்த்தையிலே நாம் கலந்துகொண்டோம்.

அந்தப் பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசாங்கம்சில தீர்வுகளை முன்வைத்தது.

வடக்கு ஒரு மாகாணமாக அமையும். கிழக்கு ஒரு மாகாணமாக அமையும். அங்கு சில அற்ப சொற்பசலுகைகள்வழங்கப்படும். இதை ஏற்றுக்கொள்ளவேண்டும்என்று எங்களை நிர்ப்பந்தித்தது.

நாங்கள் மறுத்தோம். அதன்காரணமாக நாங்கள் ஒரு தீர்வு வைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கேட்டது. நிர்ப்பந்தித்தது.

**4 அம்சக் கோரிக்கை**

இதன் விளைவாக நாங்கள் நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்தோம்

''நாங்கள் ஒரு தேசிய இனம். எங்களுக்கு என்று ஒரு பாரம்பரிய பிரதேசம் உண்டு. அது வடக்கு, கிழக்கு. நாங்கள் ஒரு தேசிய இனமாக இருக்கின்ற காரணத்தினாலேயும் எங்களுக்குப் பாரம்பரிய பிரதேசங்கள் இருக்கின்ற காரணத்தினாலேயும் எமக்குப் பிரிந்து போகின்றசுயநிர்ணயஉரிமை உண்டு. மலையக மக்களுக்குக் குடியியல் உரிமை வழங்கவேண்டும்''.

மேற்கண்டவையே எமது நான்கு அம்சக் கோரிக்கை —

இந்த நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சிங்கள அரசாங்கம் சொல்லிற்று.

வவுனியாவில் நடந்த இனப் படுகொலையைத் தொடர்ந்து அந்தப் பேச்சுவார்த்தை முறிந்துபோயிற்று.

**மீண்டும் டில்லியில்**

மீண்டும் டில்லியிலே பேச்சுவார்த்தை. பேச்சுவார்த்தைகள் சரிவரவில்லை. இதனால் எங்கள் ஆயுதங்கள் பறிக்கப்பட்டன.

பின்புஅவற்றைப்பெற்றுக்கொண்டோம். அதன் பின்பு தலைவர் அவர்களைப் பெங்களூருக்கு அழைத்தார்கள். பெங்களூருக்கு அழைத்து வடக்கு ஒரு மாகாணமாக அமையும். கிழக்கு மூன்று மாகாணமாக அமையும் என்றார்கள்.

திருகோணமலை சிங்களவருக்கும், மட்டக்களப்பு தமிழர்களுக்கும், அம்பாறைமுஸ்லிம்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் என்றார்கள்.

வடமாகாணத்திற்கு நீங்கள் முதலமைச்சராக வரலாம் என்றார்கள்.

அப்போது தலைவர் அவர்கள் கூறினார்கள் நான் இப்போதுங்கூட வடமாகாணத்துக்கு முதலமைச்சராகத்தான் இருக்கிறேன். இந்தத் தீர்விலே எனக்குச் சம்மதம் இல்லை.

நான் கிழக்குமாகாண மக்களுக்குத் துரோகம் செய்யும் ஒரு தலைவனாக வாழவிரும்பவில்லை. துரோகியாக மாற விரும்பவில்லை. எனவே இத்தீர்வை ஏற்றுக்கொள்ள முடியாது என்று.

இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்என்று வற்புறுத்தினார்கள். ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஸ்ரீலங்கா இராணுவம் பெருமளவில் போர் தொடக்கும், பெருமளவிலே மக்கள் அழிக்கப்படுவார்கள். இதற்கெல்லாம் நீங்கள் பொறுப்பேற்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்.

**அஹிம்சைப் போர்**

அதன்பின்பு எங்களிடம் இருந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் பறிக்கப்பட்டன. இங்கேதான் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமே ஆரம்பமாயிற்று.

நாங்கள் ஒரு கெரில்லாப் போராளி வீரர்கள். முதல் முறையாக ஓர் அஹிம்சைப்போராட்டத்தை நடத்தினோம்

தொலைத் தொடர்புச் சாதனங்கள் பறிக்கப்பட்டபோது தலைவர் அவர்கள் வந்தார்கள்.

காலையிலே எமது அலுவலகத்துக்கு வந்து சொன்னார்கள். ''நான் இன்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கிறேன் தண்ணீர்கூட அருந்தப்போவதில்லை என்று'' தண்ணீர் அருந்தும்படி கேட்டும் அவர் அதற்கு இணங்கவில்லை.

ஏறத்தாழ உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டு 10 மணித்தியாலங்களின் பின்பு தான் இந்த உலகத்துக்கு அந்தச் செய்தியைத் தந்தோம்.

அதன்பின்பு பலர் வந்தார்கள். தயவுசெய்து நீங்கள் தண்ணீர் அருந்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். பல இந்தியத் தலைவர்கள் வந்தார்கள். நீங்கள் தண்ணீர் அருந்த வேண்டும். உங்களை அழித்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது தலைவர் அவர்கள் சொன்னார்கள் 'நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கம்! வித்தியாசமானவர்கள். அந்த இயக்கத்தின் தலைவன் நான். நான் வித்தியாசமானவன் என்பதை இந்த உலகம் மட்டுமல்ல இந்திய அரசும் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் இறந்து போகலாம், அதுகுறித்து எனக்குக் கவலை இல்லை.

ஆனால் எமது வாழ்க்கை வரலாற்றைக் கொண்டு நாளை ஒரு புதிய சமுதாயம் மலர வேண்டும்

அது தமிழினத்துக்காகப் போராடவேண்டும் என்பது தான் எமது நம்பிக்கை' என்று.

அந்தப் போராட்டத்திலே நாங்கள் வெற்றி கண்டோம்

**ஈழத்தில்**

இதன் பின்பு தலைவர்கள் தமிழ் ஈழம் வந்தனர். தலைமை வகித்துப் போராட்டத்தை நடத்தினார்கள். இங்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை இருந்தபோது, மக்கள் அழிகின்ற ஒரு சூழ்நிலை உருவாகியபோது, தலைவன் இங்கு இருக்கவேண்டும், தனது குடும்பத்தோடு இருக்கவேண்டும். இந்த நிலையிலே தமது மனைவி குழந்தைகளுடன் இங்கு வந்தார்கள்.

**இந்திய மத்திய அரசு தலையீடு**

எங்கள் போராட்டங்கள் நடைபெற்றன வடமராட்சியிலே அழிவுகள் ஏற்பட்டன. இதன் பின்பு இந்திய அரசாங்கம் ஒருவகையிலே இந்தப் பிரச்சினையிலே நேரடியாகத் தலையிட்டது

இரண்டு வாரங்களுக்கு முன்பு திரு பூரி அவர்கள் எங்களைச் சந்தித்தார்கள்.

சந்தித்து இந்த விடயத்தைத் தயவு செய்து ஆறுதலாக, நிதானமாக நீங்கள் கேட்கவேண்டும் என்று பூரி கூறினார்.

நான் இந்தியாவின் பிரதம மந்திரியிடம் இருந்து ஒரு செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்.

அந்த செய்தி என்னவென்று சொன்னால் உங்களுடன் திரு. ராஜீவ் காந்தியவர்கள் பேச விரும்புகின்றார்கள்.

உங்களுக்கும் அவருக்கும் இடையிலே பல புரிந்துணர்வுகள் அற்ற நிலை இருக்கின்றது. நீங்கள் இருவரும் பேசுகின்றபோது உங்களுக்கு இருக்கின்ற குறைகளை நீங்களே நேரடியாக அவருக்குச் சொல்லமுடியும்.

சொல்கின்றபோது நீங்கள் இருவருமே ஒரு புரிந்துணர்வுக்கு வருகின்ற பொழுது இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பது சுலபம் என்று திரு. பூரி சொன்னார்.

திரு. ஜெயவர்த்தன வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்கிறார். தமிழுக்கு உத்தியோகமொழி அந்தஸ்து தருகிறேன் என்று சொல்கிறார்.

இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? என்றும் திரு பூரி கேட்டார்.

தலைவர் அவர்கள் மிகவும் தெளிவாகப் பதில் சொன்னார்கள்.

இதை ஏற்றுக்கொள்வது என்பது எமது பிரச்சினை அல்ல

முதலில் மே 26 ஆம் திகதிக்குப் பின்பு 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடவடிக்கைக்குப் பின்பு வடமராட்சியிலே போடப்பட்ட புதிய இராணுவ முகாம்களை இலங்கை இராணுவம் விலக்கிக்கொள்ளட்டும். தமது நிலைக்குச் செல்லட்டும். அப்போது உண்மையிலேயே ஒரு பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பது எமக்குப்புரியும்.

வடமராட்சித் தாக்குதல்களால் அகதிகளாகி உள்ள ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் திரும்பிப்போகின்ற ஒரு சகஜ நிலை உருவாகும். அப்போது நாங்கள் பேச்சுவார்த்தைக்கு ரெத் தயாராக இருப்போம்.

நாங்கள் எதையுமே ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிபந்தனையை நீங்கள் நிறைவேற்றுங்கள். அந்த நிலை உருவானால் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம் என்று சொன்

(4-ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்.

பொருள்:

அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன்மேலும் வளர்ச்சி [illegible] கொடுக்கும்.

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## ஆட்கொள்வாய் அருட்குமரா!

தொல்லை வினை தீர்க்கும்
தோகை மயில் வாகனனே
வள்ளி மணவாளா
வடிவேல் சற்குமரேசா
நல்லை நகர் நடுவே
நல்வீடு கொண்டவனே
அல்லல் அறுத்தெம்மை
ஆட்கொள்வாய் அருட்குமரா!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

06 08 1987 வியாழக்கிழமை

மீண்டும் வழமையான இடத்தில்
★ ராஜ் கோபால்ஸ் ★
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப்புடைவைகளைப் பெற்றுக்கொள்ள
★ ராஜ் கோபால்ஸ் ★
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# போலியோ தடுப்பில் அதிகாரிகள் தீவிரம்

## தடை மருந்து அருந்த ஆலோசனை

யாழ்ப்பாணம், ஆக. 6

இளம்பிள்ளை வாத நோய் (போலியோ) மீண்டும் வடபகுதியில் தலைதூக்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து தடுப்பு மருந்து கொடுக்கும் பணியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்துகள் கொடுப்பதில் அக்கறை செலுத்தும்படி யாழ் பிராந்திய பதில் சுகாதார சேவை இயக்குநர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இதுவரை இந்த நோய்க்கு ஆளான 14 குழந்தைகள் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

கிளிநொச்சி சுகாதாரப் பிரிவில் இரணைதீவு, நாச்சிக்குடா பகுதிகளிலும் —

மானிப்பாய் சுகாதாரப் பிரிவில் சுதுமலை சாவற்காடு ஆகிய பகுதிகளிலும் —

யாழ் சுகாதாரப் பிரிவில் குருநகர் பகுதியிலும் இளம்பிள்ளை வாத நோய் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளம்பிள்ளை வாதம் வராமல் தடுப்பதற்கு ஒரேயொரு வழி போலியோ தடை மருந்தை உட்கொள்வதே ஆகும் என்று வட பிராந்திய பதில் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சே. விஜயராஜா தெரிவித்தார்.

நோயில் இருந்து பூரணமாகப் பாதுகாப்புப் பெறுவதற்கு குழந்தையின் 3ஆம், 5ஆம், 7ஆம், 18ஆம் மாதங்களில் போலியோ தடை மருந்தைப் பாவிப்பது கட்டாயமானது எனவும் அவர் கூறினார். (உ-எ)

## ஜீ. சீ. ஈ. உயர் பரீட்சை 10ஆம் திகதி ஆரம்பம்

வன்செயல்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான புதிய நேர அட்டவணை பின்வருமாறு:-

10ஆம் திகதி; காலை —தாவர இயல் (பாகம்-1 தமிழ்)

பி. ப.—தூயகணிதம்.

11ஆம் திகதி:- காலை தாவர இயல் (பாகம் 2-தமிழ்)

பி. ப-சங்கீதம்

12ஆம் திகதி:- காலை விலங்கியல், பிரயோக கணிதம்.

பி. ப. சரித்திரம்.

13ஆம் திகதி:- காலை பிரயோக கணிதம், விலங்கியல்.

பி. ப. மனைப்பொருளியல்.

14ஆம் திகதி: காலை- இரசாயனவியல், பொருளியல்.

பி. ப.-நாட்டியம்

15ஆம் திகதி:- காலை- இரசாயனவியல், நட்டியம்.

பி. ப. சங்கீதம்.

17ஆம் திகதி:- காலை- பொருளியல்.

பி. ப. -சிங்களம்.

18ஆம் திகதி:- காலை -சிங்களம்.

பி. ப. -சமயம்.

19ஆம் திகதி:- காலை- சித்திரம், ஆங்கிலம்.

பி. ப. சமயம்.

20 ஆம் திகதி:- காலை சித்திரம், ஆங்கிலம்.

மாலை;- வர்த்தகமும் நிதியும்,

21ஆம் திகதி:- காலை- புவியியல்.

பி ப.- வர்த்தகமும் நிதியும்.

22ம் திகதி காலை புவியியல்

பி ப: இந்துநாகரிகம்.

24ஆம் திகதி:- காலை புவியியல்

பி ப -இந்துநாகரிகம்

25ஆம் திகதி: காலை- மூலதத்துவங்கள்,

பி. ப. விஞ்ஞான முறை,

27ஆம் திகதி:- காலை- கிரேக்கம், பிரெஞ்சு

பி. ப அரங்கியல். (ஓ-எ)

## நவதினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ். புனித மரியாள் பேராலய வருடாந்தப் பெருவிழா இவ்வருடத்திலிருந்து மீண்டும் ஆவணி மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்படும்.

நவதினம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. தினமும் மாலையில் 5 30 மணிக்கு செபமாலை, திருப்பலி, மறை உரை இடம்பெறும். மறை உரையை அருட்திரு ஜெயசிங்கம் அடிகளார் நிகழ்த்துவார். (உ)

## ஒப்பந்தத்தை ஏற்றே - - -

(3- பக்கத் தொடர்ச்சி)

னோம்.

அப்படியே செய்கிறோம் என்று சொன்னார்கள்.

மீண்டும் வந்தார்கள், வந்து சொன்னார்கள், 'நீங்கள் வரவேண்டும் திரு. ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க வேண்டும்; அது எங்களுடைய விருப்பம்' என்றார்கள்.

ராஜீவ் காந்தி அழைத்ததனாலேயே நாங்கள் செல்வதற்கு உடன்பட்டோம்

அங்கு சில ஒப்பந்தங்கள் ஏதாவது கையெழுத்திட வரலாம் என்று கடைசி நேரத்திலேயே சொன்னார்கள்.

அப்போது தலைவர் தெளிவாகச் சொன்னார் தமிழீழத்தைக் கைவிட்டு ஏதாவது ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் நான் செய்யமாட்டேன் தயவு செய்து என்னை அழைத்துச் செல்லாதீர்கள்; நான் வரவில்லை என்று.

இல்லை, பரவாயில்லை வாருங்கள்; பிரச்சினையை சொல்லுங்கள் உங்கள் பிரச்சினைகளை ராஜீவ் புரிந்து கொள்ளட்டும். அதன் மூலம் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று எங்களை அழைத்துச்சென்றார்கள்.

நம்பிக்கையோடு சென்றோம் அங்கு சென்ற பின்பு எங்களை ஒரு ஹோட்டலிலே இருத்தினார்கள் இரவு சொன்னார்கள்.

நாங்கள் இலங்கையுடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளோம். அதன்படி வடக்கு-கிழக்கு தற்காலிகமாக இணையும் (1½) ஒன்றரை ஆண்டுக்குள் சர்வசன வாக்கெடுப்பு அதனை உறுதியாக்கும் அடுத்த 72 மணிக்குள் நீங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று.

அதற்கு நாம், இது எந்த விதத்திலும் தமிழர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை. ஆகையால் இதனை ஏற்கமாட்டோம் என்றோம்.

இதில் எந்தவிதமான கருத்துக்களும் நீங்கள் சொல்லமுடியாது. நீங்கள் எது சொன்னாலும் நாங்கள் கேட்கப்போவதில்லை. நீங்கள் இதனை ஏற்றேயாக வேண்டும் என்று எம் மீது அழுத்தம் போடப்பட்டது.

### பண்ருட்டி

அதன்பின் பண்ருட்டி ராமச்சந்திரனைச் சந்திக்கச்செய்தனர். அவர் எமது குறைபாடுகளை எழுதித் தருமாறு கேட்டார்

நாம் எழுதிக்கொண்டிருக்கும்போதே பிரதமர் ராஜீவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை செல்கிறார் என்ற செய்தி கிடைத்தது.

இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியாவின் நலன் பேணப்படுகின்ற தென்ற காரணத்தினால் தமிழராகிய நாம் கைவிடப்படுகின்றோம் எங்களுக்கு இந்திய அரசு துரோகம் இழைத்துவிட்டது என பண்ருட்டி இராமச்சந்திரனிடம் குறைப்பட்டோம்.

அதன்பின்பு பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தோம்

அவர் சில உறுதிமொழிகளை அளித்தார். அதன்பின் நாம் எமது முடிவை மீள் பரிசீலனை செய்வதாகக் கூறினோம்.

எங்களை-எமது போராட்டத்தை-போராளிகளின் தியாகத்தை-மக்களின் போராட்ட பங்களிப்பை எவருமே புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதுதான் எமக்கிருக்கும் பெரும் வேதனை.

இன்று உலக அரசியல் எம்மைப் பாதிக்கின்றது. இதனை நாம் உணர்கிறோம்.

இந்தப் பாதிப்பினோடு இராஜதந்திர முறையிலே நாங்கள் நடந்து எமது இறுதி இலட்சியமான தமிழீழத்தை எவ்வகையில் அடையப் போகிறோம் என்பதை காலம்தான்முடிவுசெய்ய வேண்டும் (இ-90)



புலிகளால் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களை இந்திய இராணுவ அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.
(படம்: சண் ஜோன்சன்)

## புலிகளின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி எங்களது ஜனநாயக சமுதாயத்தை உலுக்கிய வன்செயல்களையும் இரத்தக் களரியையும் முடிவு கட்டும் வழிகாட்டியாகும்.

இப்பொழுது முதல் இலங்கையர்களாகிய நாங்கள் யாவரும் எங்களுடைய சொந்தமான, பிறந்த நாட்டில் சமாதானத்துடனும் அன்னியோன்னியத்துடனும் வாழ்வோம் என்பதே எங்கள் முழுமனதான பிரார்த்தனையாகும்.

— இப்படி ஜெனரல் ஆட்டிகல சொன்னார்.

பிற்பகல் 3-35மணிக்கு 3 ''பிக் அப்'' வாகனங்கள், 2 ''டிரக்'' வண்டிகள் ஆகியவற்றில் இருந்து ஆயுதங்களை இறக்கும் வேலை ஆரம்பமானது

ஆயுதக் கையளிப்பு நடைபெற்ற அந்த மண்டபத்தில் புலிகள், இந்திய, ஸ்ரீ லங்கா, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ் அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம், பொதுசனத் தொடர்பு அதிகாரி ரி. குலசேகரம், முப்படைகளின் கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்க, இராணுவத் தளபதி நளின் செனிவிரத்ன, யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ஜெரி சில்வா ஆகியோரும்—

இந்திய இராணுவ அதிகாரிகளும் இந்திய இராணுவ வீரர்களும் அந்த மண்டபத்தினுள் அமர்ந்திருந்தனர்.

எஸ். எம் ஜி., எம்-16, எஸ். எல். ஆர்., ஜி-3, மோட்டார் 'ஷெல்'கள், மோட்டார்கள், 50 கலிபர்கள், 30 கலிபர்கள் முதலிய ஆயுதங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

சரியாக மாலை 4. 11 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் யோகி, சுழல் துப்பாக்கி ஒன்றை ஜெனரல் ஆட்டிகலயின் மேசை மீது வைத்தார்.

ஜெனரல் ஆட்டிகல அத்துப்பாக்கியின் மீது கையை வைப்பதன் மூலம் ஆயுதங்களைப் பெறுப்பேற்கும் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

### பொது மன்னிப்பு

அதன் பின்னர் காவலில் இருக்கும் போராளிகளுக்கும் வெளியே உள்ள போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குவதாக அறிவிக்கும் ஜனாதிபதி ஜெவர்த்தனவின் கடிதத்தைத் திரு. யோகியிடம் ஜெனரல் சேபால ஆட்டிகல கையளித்தார். (அ-ஓ-7)

## முண்டி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முண்டி அடித்தனர்.

ஒரு கட்டத்தில் முட்டிக் கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஆயுதக் கையளிப்பு வைபவத்தில் 250 இற்கும் மேற்பட்ட கொழும்பு, வெளிநாட்டுச் செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இவர்கள் ஆயுதம் கையளிக்கும் வைபவத்தை படம் எடுப்பதற்காக முனைந்தபோது ஒருவரை ஒருவர் மறைக்க நேர்ந்ததால் ஒரு வேளை மோதல் இடம் பெற்றது.

எனினும் சக பத்திரிகையாளர்களால் உடனடியாகத் தடுக்கப்பட்டது. (அ)

## ஒப்பந்த...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவல் சம்பந்தமாக மேலும் பல அம்சங்களைச்சேர்க்க வேண்டி உள்ளது. அவற்றை செய்துமுடிக்க ஆறு வாரங்கள் ஆகும்.

திருத்தங்களைச் செய்து முடித்த பின்னர் சட்ட நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும், தென்னிலங்கை மக்களுக்கு ஒப்பந்தத்தின் நற்பயன்களை விளக்கி அவர்களைச் சாந்தப்படுத்தவும் சரியாக இருக்கும் என்று அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (அ)

## சிங்கள இன . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராக இருப்பேன். எமது பாதுகாப்புக்கு துப்பாக்கி தான் தேவை என்பதில்லை. மன உறுதி ஒன்றே போதும்

தமிழீழம் காண்போம் என்ற அசையாத நம்பிக்கை, உறுதி எம்மிடம் உண்டு சந்தர்ப்பம் ஏற்படும்போது நாங்கள் அதற்கான செயலில் இறங்குவோம்.

இந்தியா சுதந்திரம் பெற முந்நூறு ஆண்டுகள் போராடியது. அதே போல எமது போராட்டமும் இன்னும் நீடித்துக் கொண்டேதான் இருக்கும்

எங்களைக் காப்பாற்றிய இந்திய மக்களின் மனம் புண்படக் கூடாது என்பதற்காகவே ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

இப்படி அவர் கூறினார் (இ-ஒ-7)

## பாடசாலைகள் 31 இலேயே திறக்கப்படும்

கொழும்பு. ஆக. 6

பாடசாலைகள் மூன்றும் தவணைக்காக இம்மாதம் 31ஆம் திகதிக்கு திறக்கப்படும்.

இப்படி கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

இம்மாதம் 25-ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-எ)

## இன்று திறந்து வைக்கப்படும்

பருத்தித்துறை, ஆக. 6

பருத்தித்துறையில் யாழ் பொலீஸ் அதிபர் அலுவலகம் தற்காலிகமாக இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இங்கிருந்து யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரிவுகளுக்கான சேவைகளும் விரிவுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன் பொறுப்பதிகாரியாக பொலீஸ் அதிபர் திரு. எஸ். சமகே பொறுப்பேற்க உள்ளார் எனத் தெரிகிறது.

## புலிக்கொடி கேட்ட சிப்பாய்

யாழ். கோட்டையைச் சூழவுள்ள பாதுகாப்பு அரண்களில் நிற்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை கோட்டையிலுள்ள துருப்புகள் அடிக்கடி வந்து சந்தித்து சிநேகபூர்வமாகக் கதைத்துச் செல்வது சகஜமாகிவருகிறது

அப்படி வந்து பேசிச் சென்ற சிப்பாய் ஒருவர் போராளி ஒருவரிடம் புலிகளின் கொடி ஒன்றைத் தமக்கு நினைவாகத் தரும்படி கேட்டுக் கொண்டாராம். (உ-51)

## கண்ணிவெடி வெடித்தது

சில தினங்களாக அமைதியாக இருந்து வந்த கோட்டைப் பகுதியில் இருந்து நேற்று முற்பகல் 10 30 மணியளவில் பலத்த குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது.

கோட்டையைச் சுற்றிப் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம், அவற்றை வெடிக்க வைத்ததாலேயே அந்தச் சத்தம் ஏற்பட்டதென்று தெரிவிக்கப்பட்டது. (உ-51)

## மண்டை....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மண்டைதீவில் இருந்து நாவற்குழி முகாமுக்குச் சென்று பொருள்களையும், துருப்புகளையும் இறக்கி மீண்டு கொண்டிருந்தன. (உ-51)

## கண்ணிவெடி...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

விதமான விபத்துக்களில் சிக்கி காயமடைந்தும் மணித்தும் உள்ளனர்.

முக்கியமாக வடமராட்சி, வலிகாமம் வடக்குப் பிரிவுகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் வசித்து, இடம் பெயர்ந்தவர்கள் இவ்விடயத்தில் அவதானமாக நடந்து கொள்ளுதல் வேண்டும் என யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-எ)

## போராளிகளை-தேடிச்சென்று ஆயுதம் பெறும் நிலை வராது

பலாலி இராணுவ முகாமில் நேற்று நடைபெற்ற ஆயுதங்கள் கையளிக்கும் வைபவத்தில் ஜெனரல் சேபால ஆட்டிகலையும், இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங்கும் பேட்டி அளித்தனர்.

பேட்டியில்சிலமுக்கிய தகவல்கள் வெளியாகின. அவற்றை இங்கு தொகுத்துத் தருகிறோம்

★ பிரபாகரன் தமது சொந்த ஆயுதத்தையும் ஒப்படைக்கத் தான் வேண்டும்.

★ ஆயுத ஒப்படைப்பு நான்கு தினங்களில் முடிவடைய வேண்டும்.

★ 150 ஆயுதங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

★ சுமார் மூவாயிரம் துருப்புகளே இலங்கை வந்துள்ளன. மேலும் 1, 500 துருப்புகள் வரலாம்.

★ வடக்கு கிழக்கில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் இந்தியப் படைகள் ஈடுபடும்.

★ உள்ளூர் பொலீஸ் சேவையிலும் இந்தியத் துருப்பினர் ஒத்துழைப்பர்.

★ போராளிகளைத் தேடிச் சென்று ஆயுதங்களைப் பெறும் நிலை இனிவராது.

★ இடைக்கால நிர்வாகத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கி விட்டன.

★ இடைக்கால நிர்வாகத்தில் போராளிகளுக்கும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படும்.

★ இந்தியத் துருப்புகள் யுத்தத்துக்குப் போகும் படைவீரர்கள் என்ற நிலையிலேயே இங்கு வந்துள்ளார்கள்

★ தமிழ்ப் பகுதிகளில் லைசென்ஸ் பெற்றவர்கள் மட்டுமே துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்கப்படுவர் (அ-7)

## இனிய நாள் இன்று



சகோதரிகளாம் யாழினி ஜனனி ஆகிய இருவரும் முறையே தமது நான்காவது, இரண்டாவது வயதுப்படிகளில் பாதங்களை எடுத்துவைக்கும் நாளான இன்று, அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, மாமாமார், மாமிமார், அன்ரிமார், ஏனைய உறவினர்கள் அனைவரும் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ வாழ்த்துகின்றனர்.

நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
06- 08- 1987

ஐயனார் கோவிலடி, சுருவில், ஊர்காவற்றுறை.

(1399)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் அன்ரன் பரமதாஷ் ஜோன்ஜிதன்

ஏ. பி. ஜே. மஹால், மந்துவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அன்ரன் பரமதாஷ் பத்மராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜோன்ஜிதன் இன்று 06-08-87 தனது முதலாவது பிறந்த தினத்தை தமதில்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா ஜோன்சிகா, அண்ணன் ஜோன்ஷிகன், அங்கிள் அன்ரனி, இதயாசித்தி, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, கோபி அங்கிள், (பிரான்ஸ்) மாமாமார், அத்தைமார், பெரியம்மா, அன்ரி, பெரியப்பாமார், சித்தப்பாமார், அண்ணன்மார், அக்காமார், மைத்துனர்மார் மைத்துனிமார், அனைவரும் சகல கலைகளும் கற்று சகலகலா வல்லவனாக புனித அந்தோனியார் அருள்பெற்று நீடுழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஆதாரினத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 06-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Thursday August 06 198-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org